தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

## விசாரணை நாள் 10.07.2026

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 11141-E-2024**

திரு கு.தர்மலிங்கம் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
உதவி ஆணையர்,
நில நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு கு.தர்மலிங்கம் ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரரின் வருகை கட்டாயமானதாகும். எனவே, அவரது வருகையின்மையை ஆணையம் பதிவு செய்கிறது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | சென்னை சேப்பாக்கம், நில நிர்வாகத் துறையின் உதவி ஆணையர்-6 திருமதி இ.எச்.கலைச்செல்வி ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 23.03.2024 |
| **கோரிய தகவல்**:- நிலநிர்வாக ஆணையருக்கு தான் 23.02.2024 அன்று மனு ஒன்றை அனுப்பியிருந்ததாக தெரிவித்து அம்மனு குறித்து 4 இனங்களில் தகவல் கோரியுள்ளார். | |
| துத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்பட்டுள்ளது |

| | |
|---|---|
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 16.05.2024 |
| சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 19.08.2024 |

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் சென்னை சேப்பாக்கம், நில நிர்வாக ஆணையர் அலுவல பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனு தொடர்பாக தனக்கு எவ்வித தகவலும் வழங்கப்படவில்லையென தெரிவித்து, சட்டப் பிரிவு 19(1)-ன் கீழ் முதலாம் மேல்முறையீட்டு மனுவையும். பின்னர் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளதை தொடர்ந்து, இன்று இந்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பாக மனுதாரருக்கு 17.04.2024, 12.06.2024, 28.10.2024, 14.11.2025 மற்றும் 02.07.2025 ஆகிய தேதிகளில் பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து, அவற்றின் நகல்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கிறது:-

i. **மனுதாரர் 23.03.2024 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனுவை. நிலநிர்வாகத் துறையின் பொதுத் தகவல் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளருக்கு (பொது) உரிய காலத்தில் சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்யாமல், 17.04.2024 அன்று தான் அனுப்பி வைத்துள்ளார் என்பதை ஆணையம் பதிவு செய்கிறது. ஆகவே, குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் மனுதாரரின் 6(1) மனுவை, பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்ய தவறிய அப்போதைய நிலநிர்வாகத் துறையின் பொதுத் தகவல் அலுவலர் யார் என்பதை நிலநிர்வாகத் துறையின் கூடுதல் ஆணையர் கண்டறிந்து அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று, அதை நில நிர்வாகத் துறையின் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் 20.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.**

ii. **நிலநிர்வாகத் துறையின் பொதுத் தகவல் அலுவலர் 17.04.2024 அன்று சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்த மனுவை பெற்றுக் கொண்ட காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் மனுதாரருக்கு பதில் வழங்காமல் 29.09.2024 அன்றுதான் பதில் வழங்கியுள்ளார் என்பதை ஆணையம் பதிவு செய்கிறது. ஆகவே, மனுதாரருக்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்காத அப்போதைய காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) யார் என்பதை காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் கண்டறிந்து அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று, அதை தற்போதைய காஞ்சிபுரம் மாவட்ட**

**ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மூலம் இவ்வாணையத்தில் 20.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் SA 11141-E-2024**

பெறுநர்

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்-6,
நில நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

கூடுதல் ஆணையர்,
நில நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது).
காஞ்சிபுரம் மாவட்டம்

மாவட்ட வருவாய் அலுவலர்,
காஞ்சிபுரம் மாவட்டம்

திரு கு.தர்மலிங்கம்.
எண்.1/55-ஏ, எம்ஜிஆர் தெரு,
இரண்டாம் கட்டளை கிராமம்,
குன்றத்தூர் வட்டம். கோவூர்
சென்னை - 600 128

Copy to file
CR/PA

,